IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.215/2019

Deposition of Witness PW9

| | | | |
|---|---|---|---|
| Name | : சிவா | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.08.2025 சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

முதல் விசாரணை

நான் ஈரோடு முனிசிபல் சத்திரத்தில் வசித்து வந்து மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன். சுமார் 2011 ஆம் வருடம் தேதி மாதம் எனக்கு ஞாபகம் இல்லை. எனது சகோதரி மீனா என்பவர் மூலமாக பெருமாள் என்பவரை எனக்கு தெரியும். பெருமாள் என்பவர் என்னிடம் தனக்கு அரசு வேலை வாங்கித் தருவதாகவும் தனக்கு சென்னையில் உள்ள முதலமைச்சரின் பி.ஏ வை எனக்கு தெரியும் என்றும் கூறி ரூபாய் 80,000/-ம் கேட்டார். நானும், எனது கணவர், எனது சகோதரி ஆகியோர் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள பிரைம் மார்க் ஹோட்டலுக்கு சென்று அங்கு பெருமாளை பார்த்தோம். பெருமாள் என்பவர் போன் செய்து ஹரிபாபு என்பவரை வரவழைத்தார். நான் ஹரிபாபுவிடம் வேலைக்கு முன்பணமாக ரூபாய் 30,000/-, இலவச நிலம் வாங்குவதற்காக ரூபாய் 25000/-மும் கொடுத்தேன். நான் பணம் கொடுக்கும் போது பெருமாள் மற்றும் ஹரிபாபு ஆகியோர் மட்டுமே இருந்தனர். அதன் பிறகு எனக்கு வேலை வாங்கிதராததால் பெருமாள் என்பவரிடம் கேட்டபோது ஹரிபாபுவிடம் தானே பணம் கொடுத்தீர்கள் அவரிடம் தான் கேட்க வேண்டும் என்று கூறினார். ஹரிபாபுவிடமும் பணத்தை கேட்டபோது காலதாமதம் செய்து கொண்டு இருந்தார். 7,8 மாதமாக கேட்டும் பணம் வராததால் சிவராமன் என்பவர் புகார்

கொடுத்து இருந்தார் அவரோடு சேர்ந்து நாங்களும் புகார் கொடுத்தோம். பெருமாள், ஹரிபாபு ஆகியோரை நேரில் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும். பெருமாள், ஹரிபாபு ஆகியோர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் முதல்முறையாக பணம் கொடுத்தது சென்னையில்தான், ஈரோட்டில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த பணம் எனக்கு எவ்வாறு வந்தது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் நான் போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரை பெற்றுக் கொண்டு போலீசார் என்னை அனுப்பி விட்டார்கள் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் தற்போது வரை என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.215/2019

Deposition of Witness PW10

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வி | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.08.2025 சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

முதல் விசாரணை

நான் சாமிநாதபுரத்தில் குடியிருந்து வந்து தற்போது வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். ஆதித்தமிழர் பேரவையில் வீரகோபால் என்பவர் பொறுப்பில் உள்ளார். அவருக்கு பெருமாள் என்பவர் பழக்கம். அதன் அடிப்படையில் பெருமாள் எங்களுக்கு பழக்கம். பெருமாள் என்பவர் என்னிடம் தலைமைச் செயலகத்தில் உள்ள பி.ஏ-வை எனக்கு தெரியும் என்றும், அவர் வேலை வாங்கி கொடுத்திருப்பதாகவும் அவர் மூலமாக வேலை வாங்கி தருவதாக கூறினார். இலவச பட்டா நிலம் வாங்கி தருவதாகவும் கூறினார். அதற்கு முன்பணமாக ரூபாய் 30,000/- கொடுக்குமாறு பெருமாள் கேட்டார். எனது அப்பா அம்மா, மீனா, தங்கம், சிவா ஆகியோருடன் நான் உட்பட 10 நபர்கள் சென்னை சேப்பாக்கம் பிரைம் மார்க் ஹோட்டலுக்கு சென்றோம். அங்கு பெருமாள் மற்றும் ஹரிபாபு ஆகியோர் இருந்தனர். நான் பெருமாளிடம் வேலைக்காக 30,000/-ம், இலவச பட்டா நிலத்திற்காக 25,000/-மும் ஆக ரூபாய் 55,000/-த்தை முன்பணமாக பெருமாளிடம் கொடுத்தோம். பெருமாள் அதை ஹரிபாபுவிடம் கொடுத்தார். 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நாங்கள் பணத்தை கொடுத்தோம். பெருமாள் என்பவர் ஒரு பேப்பரை காண்பித்து பவானியில் வேலை வழங்கியிருப்பதாக சொன்னார். இரண்டு வாரங்களில் பணி நியமான உத்தரவு வருமாறு கூறினார்.

இரண்டு வாரம் கழித்து பணி நியமன உத்தரவு வராததால் பெருமாளிடம் போன் செய்து கேட்டபோது நான் உங்களிடம் வாங்கிய பணத்தை ஹரிபாபுவிடம் கொடுத்து விட்டேன் அதனால் நீங்கள் ஹரிபாபுவிடம் தான் கேட்க வேண்டும் என்று கூறிவிட்டார். அதன் பிறகு சிவராமன் என்பவர் புகார் கொடுத்தார். அவரோடு சேர்த்து நாங்களும் புகார் கொடுத்தோம். பெருமாள், ஹரிபாபு ஆகியோரை நேரில் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும். பெருமாள், ஹரிபாபு ஆகியோர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் முதல்முறையாக பணம் கொடுத்தது சென்னையில்தான், ஈரோட்டில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த பணம் எனக்கு எவ்வாறு வந்தது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் நான் போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரை பெற்றுக் கொண்டு போலீசார் என்னை அனுப்பி விட்டார்கள் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் தற்போது வரை என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.215/2019

Deposition of Witness PW11

| | | | |
|---|---|---|---|
| Name | : தங்கம் | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.08.2025 சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

முதல் விசாரணை

நான் ஈரோடு முனிசிபல் சத்திரத்தில் வசித்து வந்து வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். எனது சகோதரி மீனா என்பார் மூலமாக பெருமாள் என்பவர் எனக்கு தெரியும். பெருமாள் என்னிடம் வேலை வாங்கி தருவதாகவும், இலவச பட்டா நிலம் வாங்கி தருவதாகவும் கூறினார். பெருமாள் என்பவர் ஹரிபாபு மூலம் பணம் கொடுத்து வேலை வாங்கி தருவதாக சொன்னார். சென்னை பிரைமரி லாட்ஜில் வைத்து வேலைக்காக 30,000/-மும், இலவச நிலத்திற்காக 25,000/-மும் ஆக மொத்தம் 55,000/-த்தை ஹரிபாபுவிடம் கொடுத்தோம். அங்கு பெருமாள், ஹரிபாபு ஆகியோர் இருந்தனர். பெருமாள், ஹரிபாபு ஆகியோரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும். பணத்தை பெற்றுக் கொண்ட ஹரிபாபு வேலைக்கான உத்தரவு வரும் நீங்கள் செல்லுங்கள் என்று கூறினார். தலைமைச் செயலகம் அழைத்துச் சென்று எங்களுக்கு அலுவலகத்தை காண்பித்தார். அதன்பிறகு எங்களுக்கு வேலையும் வரவில்லை, இலவச நிலமும் கொடுக்கப்படவில்லை அதனால் நாங்கள் அரச்சலூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். போலீசார் எங்களை விசாரிக்கவில்லை 15 வருடத்திற்கு பிறகு தற்போது தான் போலீசார் நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் முதல்முறையாக பணம் கொடுத்தது சென்னையில்தான், ஈரோட்டில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த பணம் எனக்கு எவ்வாறு வந்தது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் நான் போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரை பெற்றுக் கொண்டு போலீசார் என்னை அனுப்பி விட்டார்கள் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல என்னை விசாரித்தார்கள். போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.